**கவனிக்க.**- *07.09.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1777 - 2012 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.09.21**

*1777 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி II – சட்ட சம்பந்தமானது*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| *சட்டங்கள்* | - | *பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள்* | - |
| *சட்டமூலங்கள்* | - | *பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்* | - |
| *மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள்* | - | *மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள்* | - |
| *உயர் நீதிமன்ற அறிவித்தல்கள்* | - | *சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள்* | - |
| *உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள்* | - | *நொத்தாரிசுமார் பட்டியல்* | *128* |
| *மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள்* | - | *நானாவித அறிவித்தல்கள்* | *131* |
| *கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள்* | - | *பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள்* | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.*

# *நானாவித அறிவித்தல்கள்*

### இலங்கை அரபுக் கல்லூரிகளின் ஒன்றியத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*எம். எஸ். தௌபீக் பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "இலங்கை அரபுக் கல்லூரிகளின் ஒன்றியத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த ஒன்றியத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-*

*(1) இஸ்லாமிய கல்விக்கு வசதியளித்தல் ;*

*(2) இஸ்லாம் கடைப்பிடிக்கப்படுவதை ஊக்குவித்தல் ;*

*பிறவும்.*

எம். எஸ். தௌபீக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திருகோணமலை மாவட்டம்.

*9-545*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*